**16.11.2024**

**அ.வ.எண். 202/2012**

**<u>வா.சா.2 ஜனார்த்தனன் அவர்களின் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 20.02.2008 அன்று எனது மனைவி கஸ்தூரி குணசேகரனுக்கு சர்வே எண்.83/1 எ ல் 85 செண்ட் விற்பனை செய்தத்றகான ஆவணம் என்றாலும் அதில் நான் முதலாவது சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். **(அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** குணசேகரனுக்கு விற்பனை செய்த நிலத்திற்கு மேற்கு பக்கம் தாவா சொத்து உள்ளது. பி.சா.ஆ.3ல் கண்டுள்ள சொத்தின் ஜக்குபந்தியில் மகேந்திரன் அவர்களிடமிருந்து ராஜேந்திரன் கிரையம் பெற்ற நிலத்திற்கு வடக்கும் கிழக்கும் என்று கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது.

2. பி.சா.ஆ.1 நான் எனது மனைவி கஸ்தூரிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். சர்வே எண்.83/1எ பி.சா.ஆ.1ல் கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது. எனவே நான் எனது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதிய காலத்திற்கு முன்பு 83/1 ஆனது 83/1எ மற்றும் 83/1பி ஆக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 2006ம் வருடம் முன்பே ஏற்பட்ட உட்பிரிவை 2006ம் வருடம் நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான். 2009ம் வருடம் எனது மகனுக்கு

செட்டில்மெண்ட் எழுதும்வரை மேற்படி 83/1ன் உட்பிரிவினை ஆட்சேபணை செய்து நான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. 1984ம் வருடம் மேற்படி உட்பிரிவு ஏற்பட்டது என்றால் சரிதான். 1984ம் வருடத்திலிருந்து 2009ம் வருடம் வரை உட்பிரிவினை ஆட்சேபணை செய்து நான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.3 ல் வடக்கும் கிழக்கும் மகேந்திரனிடமிருந்து ராஜேந்திரன் கிரையம் பெற்ற நிலம் என்று கண்டுள்ளதை இது நாள் வரை நான் திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். குணசேகரனுக்கு விற்பனை செய்த சொத்திற்கு மேற்கு பக்கம் மகேந்திரனிடமிருந்து ராஜேந்திரன் கிரையம் வாங்கிய சொத்து ஆகும். எனவே எனது தூண்டுதலின் பேரில் எனது மகனும் மனைவியும் இந்த வழக்கினை தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல.

4. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது சகோதரிகள் அனுசுயா மற்றும் சசிகலா ஆகியோர்கள் குணசேகரனுக்கு விற்பனை செய்த சொத்தில் தங்களுக்கு உண்டான 3ல் 2 பங்கினை குணசேகரனுக்கு அக்கு விடுதலை எழுதி கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். **(அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னிடம் காட்டப்படும் ஆவணம் 2009ம் வருடம் நான் பி.சா.ஆ.1ஆவணத்தில் திருத்தம் செய்வதற்காக எழுதிக் கொடுத்த பிழைத்திருத்தல் பத்திரம் என்றால் சரிதான். **(அந்த ஆவணத்தின்**

**சான்றிட்ட நகல் பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.5ல் தாவா சொத்தில் நான் நிறுத்திக் கொண்ட நிலம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் ஒரு பகுதியை தான் எனது மனைவிக்கு நான் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தேன் என்று எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளதற்கு பதிவு செய்யப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான். தாவா முழு சர்வே எண்.83/1க்கு எனது பெயரிலோ அல்லது எனது தந்தை பெயரிலோ வருவாய் ஆவணங்கள் உள்ளதா என்றால் எனது தந்தை பெயரில் அடங்கல் கணக்கு உள்ளது. ஆனால் அதை நான் தாக்கல் செய்யவில்லை.

6. எந்த பசலி வருடத்திற்கான அடங்கல் என்றால் 1961ம் வருடத்திலிருந்து 1982ம் வருடம் வரை. அதை ஏன் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அரசாங்கம் வழங்கிய ஆவணங்கள் இருந்ததால் அதை தாக்கல் செய்யவில்லை. நிலவரி சிறப்பு திட்டம் என்கின்ற திட்டம் முழுமை அடையவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எந்த ஆவணமும் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. 7ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்த பிறகு அவரிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்று நோக்கில் நான் வா.சா.ஆ.6 எனது மகன் பெயரில் பொய்யாக தயார் செய்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய தூண்டுதலின் பேரில் எனது மனைவி மற்றும் மகன் இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் எனவே இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

7. நான் எனது மனைவிக்கும் மகனுக்கும் பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றாலும் சரியல்ல.

(மேற்படி குறுக்கு விசாரணையை 3ம்,11ம்,12ம், 14ம் பிரதிவாதிகள் ஏற்றுக் கொள்வதாக அவர்களது வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்).